**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், பென்னாகரம்.**

**முன்னிலை** : திருமதி.ஜெ.நாகலட்சுமி(எ)விஜயராணி,பி.ஏ.,பி.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் குற்றவியல் நடுவர், பென்னாகரம்.

நாள் 2024 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24– ம் நாள் வியாழக்கிழமை

**ஜீவனாம்ச மனு எண் – 03/2022**

**CNR.No.TNDP0500 2699 – 2022**

1. மங்கம்மாள், வயது 26, க/பெ. மாரிமுத்து

2. மைனர் ஜானுஸ்ரீ, த/பெ. மாரிமுத்து

3. மைனர் லித்திஸ், த/பெ. மாரிமுத்து,

(மேற்படி மைனர்களுக்கு அவரது தாயாரும் பாதுகாவலரும்மான மங்கம்மாள்)

மேற்படி அனைவரும் வசிக்குமிடம் கதவு எண். 2/474, வீராசனூர் கிராமம், பாலக்கோடு வட்டம், தருமபுரி மாவட்டம். ........... மனுதாரர்கள்

/எதிராக/

மாரிமுத்து, வயது 33, த/பெ.கண்ணு, பனந்தோப்பு கிராமம், M. சவுளூர், மிட்டஅள்ளி ஊராட்சி, கிருஷ்ணகிரி மாவட்டம். ........ எதிர்மனுதாரர்

இந்த மனுவானது 24.10.2024 –ம் தேதி என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.கார்த்திகேயன்,பி.எஸ்சி.பி.எல்., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.R.சின்னதம்பி,எம்.பி.ஐ., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

1. இந்த மனுவானது 1,2 மனுதாரர்களுக்கு பிரிவு 125(1)**(a)(b)** குவிமுசவின் கீழ் ஜீவனாம்சம் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்:**

1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 30.05.2018 ம் தேதி பிக்னஅள்ளியில் உள்ள சென்றாயசாமி கோவிலில் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணமானது இந்து முறைப்படி நடந்ததகாவும், 1ம் மனுதாரரின் பெற்றோர்கள் திருமணத்தின்போது சீர்வரிசையாக 20 பவுன் நகை, பீரோ, கட்டில் உள்ளிட்ட பொருட்களை கொடுத்து, திருமண செலவுகளையும் ஏற்றுக்கொண்டதாகவும் எதிர்மனுதாரர் பெங்களுரில் உள்ள தனியார் கம்பெனியில் Facility Engineer ஆக பணிபுரிந்த நிலையில் 1ம் மனுதாரர் B.Sc., முடித்துவிட்டு ஆசிரியர் பயிற்சி படிப்பிற்கு தயராகி இருந்த நிலையில் திருமண ஏற்பாடு செய்ததால் மனுதாரரை படிக்க வைப்பதாக வாக்குறுதி கொடுத்து வற்புறுத்தி திருமணம் செய்துகொண்ட நிலையில் சில நாட்கள் மட்டுமே சுமுகமான முறையில் வாழ்ந்தபோதும், 1ம் மனுதாரரின் பெற்றோர் மற்றும் உறவினர்களை திருமண சடங்கு எதையும் செய்யவிடாமல் தடுத்து வந்ததாகவும்,

(ii) காஞ்சிபுரத்தை சேர்ந்த அரசு மருத்துவமனையில் பணிபுரியும் செவிலியராக திலகவதி என்பவர் முன்னிலைப்படுத்திக்கொண்டு தொந்தரவு செய்து வந்த நிலையில் எதிர்மனுதாரரிடம் கேட்டதற்கு தனது நெருங்கிய நண்பர் என்று கூறிகொண்டு திருமண வேலையிலேயே திலகவதியுடன் இயல்புக்கு மாறான முறையில் கட்டிப்பிடித்து கொண்டு புகைப்படத்தை எடுத்ததாகவும், எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் எதிர்மனுதாரரின் நடத்தையை கண்டிக்காமல் அதற்கு ஆட்சேபித்த மனுதாரரின் பெற்றோருடன் சண்டையிட்டதாகவும்,

(iii) பின்னிட்டு திருமணத்தின் பயனாக 1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாருக்கும் 12.05.2020 அன்று ஜானுஸ்ரீ என்ற பெண் குழந்தை பிறந்தநிலையில் பிரசவ செலவு உள்ளிட்ட மருத்துவ செலவுகளை 1ம் மனுதாரரின் பெற்றோர்கள் செய்ததாகவும், திருமணமான நாள் முதல் குழந்தை பிறந்ததற்கு பின்னிட்டும் மனுதாரர்களுக்கு தேவையான உணவு, உடை, மருத்துவம் எதையும் எதிர்மனுதாரர் கண்டுகொள்ளாத நிலையில் மளிகை பொருட்கள் உள்ளடக்கங்களாக குழந்தை வளர்ப்புக்கு தேவையான அத்தியவாசியமான அனைத்து பொருட்களையும் 1ம் மனுதாரின் தந்தையே வாங்கிகொடுத்தாகவும்,

(iv) திருமணத்திற்கு பின்னிட்டு 1ம் மனுதாரரே மேற் படிப்பு படிக்க அனுமதி கேட்டபோது இது சம்பந்தமாக எந்தவொரு பேச்சும் எடுக்ககூடாது என்றும், மீறி எடுத்தால் வாழவெட்டியாக விரட்டியதாகவும், மார்ச் 2019 அன்று மார்ச்சில் 1ம் மனுதாரர் ஆசிரியர் பயிற்சி படிப்பிற்காக அவரது தந்தை ரூ.85,000/– வழங்கிய நிலையில் எதிர்மனுதாரடுடன் சென்று தருமபுரியில் ஸ்ரீ லட்சுமி நாராயணா கல்லூரியில் ஆசிரியர் அட்மிசன் செய்துவிட்டு வீட்டுக்கு திரும்பும்போது எதிரில் வந்து பெண்ணைப் பார்த்து அவள் மிகவும் அழகாகவும், கட்டழகுடனும் இருப்பதாகவும், அவள்போன்று இல்லாது சம்மந்தமாக ஆபாச வார்த்தைகளால் திட்டியதால் ஏற்பட்ட வாக்குவாதத்தால் எதிர்மனுதாரர் கண்மூடித்தனமாக அடித்தால் 1ம் மனுதாரரின் முகம், உடல் முழுவதும் ரத்த காயங்களுடன் மயங்கிவிழுந்துவிட்ட நிலையில் அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிக்சை அளிக்காமல் அங்கேயே விட்டுவிட்டு ஓடிவிட்டதாகவும், அக்கம்பக்கத்தினர் தான் 1ம் மனுதாரரை மீட்டு முதலுதவி சிகிச்சை செய்து பெற்றோருக்கு தகவல் கொடுக்கப்பட்டு, காவேரிப்பட்டணம் சண்முகா மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாகவும், எதிர்மனுதாரரின் 1ம் மனுதாரரின் பெற்றோரிடம் மனுதாரரை அடிக்காமல் பார்த்துக்கொள்வதாக உறுதியளித்து வேலை நிமித்தமாக பெங்களுர் செல்ல இருப்பதால் 1ம் மனுதாரை அனுப்பி வைக்க வேண்டி கேட்டுக்கொண்டதன் பேரில் 2019 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அனுப்பி வைத்த நிலையில் எதிர்மனுதாரர் தனது நடத்தயை மாற்றிக்கொள்ளாமல் மற்ற பெண்களை பற்றி வற்னித்து 1ம் மனுதாரருடன் வாழ விருப்பம் இல்லை என்ற கூறி அவரது பெற்றோர் வீட்டிற்கே செல்லும்படி வற்புறுத்தியதால் மறுப்பு தெரித்தவரை எதிர்மனுதாரர் கடுமையாக தாக்கியதில் வலி தாங்க முடியாமல் வீட்டின் மேல்புறத்தில் இருந்து கீழே இறங்கி சென்றபோது " எங்கே ஓடுகிறாய் : தேவிடியா நில்லுடி உன்னை கொன்றுவிட்டு நா வேற பொண்ணை கல்யாணம்" செய்துகொள்கிறேன் என்று கூறியவாறே 1ம் மனுதாரர் கர்ப்பிணியாக என்றும் பாராமல் துரத்தி சென்று கழுத்தில் சுற்றி தரதரவென்று வீட்டிற்கு கீழிருந்து மேலாக இழுத்து சென்றதில் துரல்வளை நசுக்கப்பட்டு 1ம் மனுதாரர் மூச்சு விடுவதற்கே சிரமப்பட்டு வந்த நிலையில் போன் மூலம் தகவல் சொல்லவே மறுநாள் 1ம் மனுதாரரின் தந்தை மீட்டு வந்ததகாவும்,

(v) எதிர்மனுதாரரின் சித்தரவதையை எண்ணி மனஉளைச்சலாகி பூச்சி மருந்து குடித்து தற்கொலைக்கு முயன்ற நிலையில் 1ம் மனுதாரரின் பெற்றோர்கள் அவரை மீட்டு பாலக்கோடு அரசு மருத்துவமனையில் சேர்த்து காப்பாற்றியதாகவும், 1ம் மனுதாரர் விசம் குடித்த விபரத்தை எதிர்மனுதாரரிடம் கூறியபோது " இன்னும் சாகவில்லையா என்று பேசி மனஉளைச்சலை" ஏற்படுத்தியதாகவும், எதிர்மனுதாரர் அவரது பெற்றோர்களின் தூண்டுதலின் பேரில் மீண்டும் சேர்ந்து வாழவேண்டுமெனில் வீடு கட்டுவதற்கு 15 லட்சம் கொடுத்தால் மட்டுமே வாழ முடியும் என்று கூறிய நிலையில் கிருஷ்ணகிரி அனைத்து மகளிர் காவல் நிலையம் 1ம் மனுதாரர் புகார் அளித்தாகவும்,

(vi) புகாரின் மீது விசாரணை மேற்கொண்டு இரு தரப்பினரையும் சமாதனம் பேசியதில் இருவரும் சேர்ந்துவாழ்வதற்காக எதிர்மனுதாரர் வீட்டிற்கு சென்றபோது காவல் நிலையத்தில்புகார் கொடுத்து அவமானப்படுத்திவிட்டதால் எக்காரணத்தை கொண்டும் 1ம் மனுதாரரை மனைவியாக ஏற்கமாட்டேன் என்று கூறி 1ம் மனுதாரர் 7 மாத கர்ப்பினியாக இருந்த நிலையில் கருவை கலைத்துவிடுமாறு தாக்கியநிலையில் உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்தாகவும், 1ம் மனுதாரர் மீது கிருஷ்ணகிரி காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்து மகேந்திமங்கலம் காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டு சமரச விசாரணையின் போதே எதிர்மனுதாரரின் குடும்பத்தார் தகராறு செய்துவிட்டு சென்றதாகவும், அதற்கு பின்னிட்டு 1ம் மனுதாரர் தான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ மறுப்பதாக பொய் புகார்களை கூறி வந்த நிலையில் கிருஷ்ணகிரி குடும்ப நல நீதிமன்றத்தில் மணவாழ்க்கை சேர்ந்து வாழ கோரி எதிர்மனுதாரர் மனு தாக்கல் செய்து அதனை திரும்ப பெற்றுக்கொண்டதாகவும், பின்னிட்டு தான் 22.10.2021 அன்று லித்திஸ் என்ற ஆண் குழந்தை இரண்டாவதாக பிறந்ததாகவும், எதிர்மனுதாரரிடம் திலகவதியுடன் பழக்கத்தை விட்டுவிட்டு கணவன், மனைவியாக சச்சரவு இல்லாமல் வாழுழம் என்று கூறியதற்கு திலகவதியுடன் உள்ள உறவை முறித்துக்கொள்ள மறுத்துவிட்டதாகவும், எதிர்மனுதாரர் திருமணம் ஆன நாள் முதலே திகலவவதியுடன் எந்நேரமும் போனில் பேசிக்கொண்டும், வெளியூர் செல்வதாக கூறி திலகவதியை சந்திக்க காஞ்சிபுரம் சென்ற நிலையில் எதிர்மனுதாரரின் பெற்றோர், அண்ணன் மாரியப்பன் ஆகியோருடன் தெரிவிக்க அதனை கண்டிக்காமல் ஆதரித்தே வந்ததாகவும், 1ம் மனுதாரரின் தந்தை

நீரிழிவு நோயாளி இருந்ததால் தனது தந்தையின் உடல்நலம் கெட்டுவிட கூடாது என்பதற்காக திலகவதி உடனான உறவை தனது பெற்றோர்களிடம் கூறாமல் மறைத்துவிட்டதாகவும்,

(vii) பின்னிட்டு, 05.12.2021ம் மதியம் 12 மணியளவில் எதிர்மனுதாரர் 1ம் மனுதாரர் வீட்டிற்கு வந்து நீ உயிருடன் இருந்தால் திலகவதியுடன் வாழ முடியாது என்று கூறி 1ம் மனுதாரரின் கழுத்தை பிடித்து இறுக்கியதாகவும், அந்த பிடியிலிருந்து தப்பிக்க முயற்சித்தபோது 2ம் மனுதாரரை அடித்து கொன்றுவிடுவதாக கூறி நீண்ட தூரம் தரதரவென்று இழுத்து சென்ற நிலையில் தோள்பட்டை வலி தாங்காமல்கத்தியதால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறிவிட்டு 2ம் மனுதாரரின் தெருவில் வீசி சென்ற CCTV பதிவுகளும், புகைப்படமும், புகாருடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும்,

(viii) எதிர்மனுதாரரின் குடும்பத்தாரர் திடீரென்று பணப்பிரச்சனை ஏற்பட்ட நிலையில் 1ம் மனுதாரருக்கு திருமணத்தன்போது சீர்வரிசையாக கொடுத்த நகைகளை காவேரிப்பட்டணம் இந்தியன் வங்கி கிளையில், 1ம் மனுதாரர் பெயரில் 9 பவுன் நகையும், மீதமுள்ள 11 பவுன் நகையை எதிர்மனுதாரரின் தந்தை பெயரிலும் அடகு வைத்து எதிர்மனுதாரர் பணம் பெற்றுக்கொண்டதாகவும், எதிர்மனுதாரர் கணவன் மற்றும் தந்தை என்ற முறையில் 1– 3 மனுதாரர்களுக்கு எவ்வித பராமரிப்பும் செய்யாமல் தன் தோன்றித்தனமாக திலகவுடன் தகாத உறவு கொண்டு சம்பதிக்கும் பணத்தை செலவு செய்து வரும் நிலையில் 1ம் மனுதாரர் பெற்றோர் வீட்டில் இருந்துக்கொண்டு 2,3 மனுதாரர்களை பராமரிக்கவும், மருத்துவ செலவுகள் செய்ய முடியாமல் கஷ்ட ஜீவனம்சம் செய்து வருவதாகவும்,

(ix) எதிர்மனுதாரர் தற்பொழுது பர்கூரில் உள்ள ABC Fruits. கம்பெனியில் Senior Executive ஆக பணிபுரிந்து மாதம் ரூ.24,050/– சம்பளமும், எதிர்மனுதாரருக்கு சொந்தமான 8 1/2 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து அதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.30,000/– வரை வருமானம் ஈட்டி வரும் நிலையில் 1 – 3 மனுதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.30,000/– வீதம் ஜீவனாம்சமாக வழங்க கோரி இம்மனுவினை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரரின் எதிர்வழக்குரையின் சுருக்கம்.**

(i) எதிர்மனுதாரர் திருமணத்திற்கு முன்பு காஞ்சிபுரம் மாவட்டம், உரகடம் ஊரில் வேலை செய்தபோது உடல் நலம் சரியில்லாமம் போகவே பண்ருட்டி பிளச் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது காய்ச்சல் அதிகமாகிவிட்ட நிலையில் திலகவதி (வயது 46) என்ற செவிலியர் தாய்போல் கவனித்து காப்பாற்றிய நிலையில், நன்று மறாவமல் திலகவதியை அழைத்த நிலையில் 12.09.2018 ம் தேதி நடைபெற்ற திருமண வரவேற்பு விழாவிற்கு திலகவதி வந்ததாகவும், மனுவில் தவறாக சித்தரித்து கூறப்பட்டுள்ள சங்கதியானது எதிர்மனுதாரருக்கு மன உலைச்சலை தந்ததாகவும், எதிர்மனுதாரரும், 1ம் மனுதாரரும் கூட்டுக்குடும்பமாக எதிர்மனுதாரர் வீட்டில் 6 மாதம் மட்டுமே வாழ்ந்து வந்த நிலையில் பெங்களுரில் உள்ள சொடக்சோ என்ற நிறுவனத்தில் எதிர்மனுதாரர் 3 வருடமாக வேலை செய்த காலகட்டத்தில் 1ம் மனுதாரரை பெங்களுக்கு அழைத்து சென்றுவிட்டதாகவும்,

(ii) பெங்களுரில் 3 மாதங்கள் மட்டுமே சுமுகமாக வாழ்ந்த நிலையில் யுகாதி பண்டிகைக்கு 1ம் மனுதாரர் வீட்டிற்கு வந்துவிட்ட நிலையில் மறுநாள் விஷம் குடித்தாக எதிர்மனுதாரருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதன் பேரில் பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று 1ம் மனுதாரரை விசாரித்ததற்கு மனுதாரர் தன்னுடைய பெற்றோர்கள் திட்டியதால் ஈ மருத்து குடித்துவிட்டதாக சொன்னதாகவும், அதற்கு பின்னிட்டு 10 நாட்கள் கழித்து எதிர்மனுதாரர் பெங்களுருக்கு வேலைக்கு சென்ற நிலையில் 3 நாட்கள் கழித்து 1ம் மனுதாரரும் வந்துவிட்டதகாவும், 2019 ல் மே மாதம் சட்ட மன்ற தேர்தல் நடந்தபோது ஓட்டுபோட 1ம் மனுதாரரை அழைத்ததற்கு சண்டையிட்டுக்கொண்டு எதிர்மனுதாரர் வீட்டிற்கு வர மறுத்துவிட்டு 1ம் மனுதாரர் அவரது தந்தைக்கு கைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசிய நிலையில் அவரது தகப்பனார் பெரியப்பா செல்வம், நஞ்சுண்டன் ஆகிய மூவரும் வந்து அன்றைய தினம் இரவு 1 மணியளவில் அழைத்து சென்றதாகவும், பின்னிட்டு 1 1/2 மாதம் கழித்து 1ம் மனுதாரரின் பூர்வீகமான வீரசனூரில் வைத்து பஞ்சாயத்து பேசியபோது சொன்னபடி நடக்காவிட்டால் சபையை விட்டு வெளியே போடா என்று கூறியதால் இருசக்கர வாகனத்தை எதிர்மனுதாரர் எடுக்கசென்றபோது அதனை தான் வாங்கி கொடுத்தது என

கூறி 1ம் மனுதாரரின் தந்தை பிடுங்கி கொண்டதாகவும் பின்னிட்டு 10 நாள் கழித்து 1ம் மனுதாரரின் சித்தப்பா சரவணன் அறிவுரை கூறி அனுப்பி வைப்பதாக சொல்லிய நிலையில் 1ம் மனுதாரர் பெங்களூரில் இருந்ததாகவும், பின்பு எதிர்மனுதாரரி சம்பவத்திற்கு மாரியப்பன் குடும்பத்தில் பிரச்சனை செய்யாமல் மோல்டு போட்ட வீடு கட்டியதற்கான செலவு தொகையில் பாதி ரூ. 15,00,000/– த்தில் பாதி கொடுத்துவிடுவதாக கூறி 1ம் மனுதாரர் வரதட்சணை கேட்டதாக கூறி தனது பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டதாகவும்,

(iii) பின்னிட்டு 2019 நவம்பர் 2 வது வாரத்தில் கிருஷ்ணகிரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வரதட்சணை கேட்டதாக புகார் கொடுத்து உதவி ஆய்வாளர் விசாரித்தபோது 15 பவுன் தங்க நகைகளையும், இருசக்கர வாகனத்தையும்பிடுங்கிக்கொண்ட நிலையில் எப்படி வரதட்சணை கேட்கிறார் என்று கேட்டதற்கு 1ம் மனுதாரர் பதில் எதுவும் சொல்லாத நிலையில் புத்திமதி அளித்து எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழுமாறு கூறியதற்கு பெங்களுருக்கு அழைத்து சென்றால் மட்டுமே வரமுடியும் என்று கூறியதால் அவரது விருப்படி பெங்களூரில் 3 மாதம் நன்றாக வாழ்ந்ததாகவும் பின்னிட்டு 7 மாத கர்ப்பிணியாக இருந்தபோது இரவு 7 மணிக்கு தான் சிப்டு நேரம் முடிந்து வந்தபோது தாமதமாக வருவத சம்மந்தமாக கேட்டதற்கு காலை 9.30 – 7 மணி வரை ஜன்ரல் சிப்டு என்று கூறியபோதும் ஒப்புக்கொள்ளாமல் வீணாக சந்தேகப்பட்டு 1ம் மனுதாரரின் பெற்றோருக்கு தகவல் தெரிவித்து 7 நபர்கள் வந்து 19.02.2020 ம் தேதியில் எதிர்மனுதாரரை பிடித்துக்கொண்டு அடித்து முகத்தினை நகத்தால் கீறி காயம் ஏற்படுத்திவிட்டு இனிமேல் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ முடியாது என்று கூறிவிட்டு வீட்டில் உள்ள பொருட்களை எல்லாம் எடுத்து சென்றுவிட்டதாகவும்,

(iv) அதற்கு பின்னிட்டு தான் 1ம் எதிர்மனுதாரர் மீது கிருஷ்ணகிரி காவல் கண்காணிப்பாளிடம் புகார் கொடுத்தாகவும், உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார். 27.02.2020 ம் தேதி 1ம் மனுதாரர் 7 மாத கர்ப்பிணியாக இருந்ததாகவும், 1ம் மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்று கூறிய நிலையில் குழந்தை பிறந்த பின்பு சரியாகிவிடும்என்று அறிவுரைகூறி அனுப்பி வைத்ததாகவும், அதற்கு பின்பு குழந்தை பிறந்தது சம்மந்தமாக எதிர்மனுதாரருக்கு தகவல் எதுவும் கொடுக்காத

நிலையில் 12.05.2020 மாலை 6.37 மணிக்கு தருமபுரி அரசு மருத்துவமனையில் பெண் குழந்தை பிறந்ததாக Message அனுப்பியதாகவும், 1ம் மனுதாரர் 7 மாத கர்ப்பிணியாக இருநத்போதே பிரச்சனை செய்து அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்று எந்த ஒரு பேச்சுவார்த்தையும் இல்லாத நிலையில் குழந்தை பிறந்தும் வரக்கூடாது என்றும், மீறி வந்தால் பிரச்சனை ஏற்படும் என்று சொல்லிய நிலையில் 1,2 மனுதாரர்களுக்கு உண்டான அடிப்படை தேவைகளை செய்திருக்க இயலாது என்றும் மனுதாரருக்குண்டான மேற்படிப்பிற்குண்டான செலவுகளை எதிர்மனுதாரரே செய்வதாகவும், அதற்கு பின்னிட்டு பெங்களுருக்கு சென்று குடும்பம் நடத்திய நிலையில் எதிர்மனுதாரருடன் சண்டை பிடித்துக்கொண்டு இரவு 1 மணிக்கெல்லாம் சென்றுவிட்டதாகவும்,

(v) எதிர்மனுதாரரின் சகோதரர் மாரியப்பன் மகள் மகாலட்சுமிக்கு 27.01.2022 ம் தேதி திருமணம் நிச்சயித்து திருமண பத்திரிக்கையை மாரியப்பன் மகன் சக்திவேல், மற்றும் அவரது மனைவி சத்யா இருவரும் 1ம் மனுதாரரின் பெற்றோர் வீட்டிற்கு சென்று பத்திரிக்கை வைத்ததகாவும், அப்போது 1,2 மனுதாரர்கள் மற்றும் 1ம் மனுதாரரின் பெற்றோர்கள் திருமணத்திற்கு வந்திருந்ததாகவும், பின்னிட்டு எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் 1ம் மனுதாரரின் வீட்டிற்கு சென்று பஞ்சாயத்து பேசியதில் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் தெரிவித்தால் 1,2 எதிர்மனுதாரர்கள் வந்த நிலையில் எதிர்மனுதாரர் பெங்களூரில் உள்ள வேலையை விட்டுவிட்டு சவூளுர் கிராமத்திற்கு வந்து 1ம் மனுதாரருடன் குடும்பம் நடத்தியதில் ஜானு என்ற பெண் குழந்தை பிறந்ததாகவும், அந்த பெண் குழந்தை தான் 2ம் மனுதாரர் என்றும், எனவே, 2வது குழந்தை 7 மாத கருவை கலைத்துவிடுவதாக வற்புறுத்தியதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்று மனுதாரரின் ஜீவனம்சம் மனுவில் எந்த ஒரு அடிப்படை முகாந்திரமும் இல்லாததால் எந்த ஒரு மனுவும் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டியது.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கப்படதக்கதா? அவ்வாறெனில் எவ்வளவு தொகை மனுதாரர்களுக்கு ஜீவனாம்சமாக கிடைக்கத்தக்கது? என்பதேயாகும்.

**5. தீர்வு:**

(i) இவ்வழக்காவணங்கள் முழுவதையும் ஒட்டுமொத்தமாக பரிசீலனை செய்த வகையில் 1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 30.05.2018ம் தேதி பிக்னஅள்ளியில் உள்ள சென்றாயசாமி கோவிலில் பெரியோர்களரால் நிச்சயிக்கப்பட்ட திருமணமானது இந்து முறைப்படி நடந்தது என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். அத்துடன் **ம.சா.ஆ.1** திருமண பத்திரிக்கை கணவன் – மனைவி என்ற உறவினை மெய்ப்பிக்கும் விதமாக உள்ளது. மேலும், 1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையிலான திருமண பந்தத்தின் பயனாக 2,3 மனுதாரர்கள் முறையே 12.05.2020, 22.10.2021 ஆகிய தேதிகளில் பிறந்ததாக சொல்லப்பட்ட சங்கதியானது எதிர்மனுதாரரால் மறுக்கப்படவில்லை. அத்துடன் 2,3 மனுதாரர்களின் பிறப்பு சான்றானது தாக்கல் செய்யப்பட்டு **ம.சா.ஆ.3,9** ஆக குறியீடு செய்யப்பட்ட நிலையில் எதிர்மனுதாரர் சட்டப்பூர்வ தந்தை என்பதை உறுதிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது. எனவே 1 முதல் 3 மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையிலான சட்டப்பூர்வ உறவுமுறையானது மனுதாரர்கள் தரப்பில் மெய்ப்பிக்கப்பட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(ii) இந்நிலையில், 1 ம் மனுதாரரை பொறுத்தவரை எதிர்மனுதாரரின் சட்டப்பூர் மனைவி மற்றும் 2,3 மனுதாரர்களை பொறுத்தவரை எதிர்மனுதாரரின் சட்டப்பூர்வ மகள் மற்றும் மகன் என்ற முறையில் எதிர்மனுதாரர் மனுதாரர்களின் தேவைகளை பூர்த்தி செய்து பராமரிக்க சட்டப்படி கடமைப்பட்டவர் ஆவார். இந்நிலையில் மனுதாரர்கள் எதிர்மனுதாரரிடமிருந்து குவிமுச பிரிவு 125(4)ன் கீழ் ஜீவனாம்சம் பெற தகுதியுடையவரா? என்று தீர்வு காண்பதற்கு முன்பாக குவிமுச பிரிவு 125(4)ன் வரையறையை காண்பது அவசியமாகிறது.

குவிமுச பிரிவு 125(4) என்ன கூறுகிறதெனில், பிரிவு 125(4) No wife shall be entitled to receive an allowance for the maintenance or the interim maintenance and expenses of proceeding, as the case may be from her husband under this section if she is living in adultery, or if, without any sufficient reason, she refuses to live with her husband, or if they are living separately by mutual consent. குவிமுச பிரிவு 125(4) ஒரு மனைவி

தனது கணவனை பிரிந்து ஜீவனாம்சம் பெறுவதற்கு 3 தகுதியிழப்பு செய்யப்பட்டுள்ளது. குவிமுச பிரிவு 125(4)ன் வரையறைக்கு உட்பட்டு 1ம் மனுதாரர் பிறர்மனையை நயத்ததில் வாழ்ந்து வருகிறாரா என்பதை நிரூபிக்கும் கடமை எதிர்மனுதாரருக்கு உள்ளது.

(iii) எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையில் மேற்சொன்னவாறாக மூன்று தகுதியிழப்புகள் இருப்பதாக எந்த விபரமும் 1ம் மனுதாரரை பொறுத்து சொல்லப்படவில்லை. அத்துடன் எதிர்மனுதாரர் பெங்களூரில் பொறியாளராக பணிபுரிந்த நிலையில் மனுதாரர் இல்வாழ்க்கையில் ஈடுபட்ட நிலையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பலமுறை கிருஷ்ணகிரி அனைத்து மகளிர் காவல் நிலையத்திலும், மகேந்திரமங்கலம் காவல் நிலையத்திலும் புகார் கொடுக்கப்பட்டு இருதரப்பினரும் பிரிந்து வாழ்ந்து வருவதாக ம.சா.ஆ.6, 10 ஆவணங்கள் மூலமாக அறியமுடிகிறது. மேலும், எதிர்மனுதாரரை பொறுத்தமட்டில் தகாத தொடர்பில் இருப்பதாக மனுதாரர் தரப்பு புகாரில் சொல்லப்பட்டிருப்பினும், எதிர்மனுதாரர் தரப்பில் அதற்குண்டான விளக்கம் அளிக்கப்பட்டிருக்கும் நிலையில் அதனை மனுதாரர்கள் தரப்பில் மறுத்துரைத்து நீதிமன்றம் நம்பும் விதமாக எவ்வித சாட்சியமும் முன்னிடப்படாத நிலையில் அதனை குறித்து மேலும் பரிசீலிக்கவேண்டிய அவசியமில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

(iv) இவ்வாறான நிலையில் மனுதாரர் புகாரில் கூறியுள்ள சங்கதிகளை அனுசரித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்து ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.1 ன் மூலமாக கிருஷ்ணகிரி குடும்ப நல நீதிமன்றத்தில் சேர்ந்து வாழக்கோரி எதிர்மனுதாரர் தாக்கல் செய்த மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டதாக ம.சா.ஆ.7 மற்றும் 14 ஆவணமானது முன்னிடப்பட்டுள்ள நிலையில் இருவரும் சேர்ந்து வாழ முயற்சித்த நிலையில் அதற்குண்டான சாத்தியகூறுகள் எதுவும் இல்லாததால் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்பதை அறியமுடிகிறது. ம.சா.ஆ. 1 மூலமாக குறியீடு செய்யப்பட்ட மா.சா.ஆ. 1 முதல் 28 வரையிலான சான்றாவணங்கள் மனுதாரர்களுக்கு சாதகமாக அமைந்துள்ள நிலையில் போதிய காலஅவகசம் அளித்தும் எதிர்மனுதாரர் தரப்பில் மா.சா.1 குறுக்கு விசாரணை செய்யும் வாய்ப்பை பிரயோகப்படுத்தவில்லை. எனவே, மனுதாரர்கள் போதிய நியாயமான காரணங்களுக்காக தான் எதிர்மனுதாரரை பிரிந்து வாழ்கிறார்கள் என்று அனுமானிக்கவேண்டியுள்ளது மேலே சொன்னபடி

விவரிக்கப்பட்டதன் அடிப்படையில் மனுதாரர்கள் எதிர்மனுதாரரிடம் ஜீவனம்சம் பெற தகுதியுடையவர்கள் என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**<u>பிரச்சனை 2 ற்கான தீர்வு</u>**

(i) 1ம் மனுதாரருக்கு எதிர்மனுதாரர் ஜீவனாம்சம் வழங்க கடமைப்பட்டவர் என்பதை பிரச்சனை 1ல் தீர்வு கண்டுள்ள நிலையில் எவ்வளவு தொகையை ஜீவனாம்சம் பெற தகுதியுடையவர் என்பதை வி. தண்டாயுதபாணி Vs புவனேஷ்வரி and others CDJ 2016 MH Page 411 என்ற முன் தீர்ப்பின் அடிப்படையில் முடிவிற்கு வரவேண்டியது அவசியமாகிறது. Possessions and state of parties reasonable wants of the claimat towards food, clothing and shelter, medical attendence with treatement and education and the life name of the claimate name of the opposit party, number of the opposite party obliged to maintain என்பதை நிரூபிக்கவேண்டியது மனுதாரரையே சாரும்.

(ii) மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் எதிர்மனுதாரர் தற்போது பர்கூரில் உள் ABC பழக்கடை கம்பெனியில் Senior Executive ஆக பணிபுரிந்து மாதம் ஒன்றுக்கு ரூ.24,050/– சம்பளமாகவும், எதிர்மனுதாரர்களுக்கு சொந்தமான 8 1/2 ஏக்கர் நிலத்தை விவசாயம் செய்து ரூ. 30,000/– ம் வரை மாதம் ஒன்றுக்கு ஈட்டி வருவதாகவும் சொல்லப்பட்ட சங்கதியானது எதிர்மனுதாரர் மறுக்கப்படவில்லை, ஆனால் விவசாய நிலத்தை பொருத்தமட்டில் கூட்டுகுடும்ப சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. அத்துடன், எதிருரை மூலமாக மனுதாரர்களை தவிர பெற்றோர்கள் உள்ளிட்ட வேறு யாரையும் பராமரிக்க வேண்டிய கடமை எதிர்மனுதாரருக்கு இல்லை எனபது தெரிய வருகிறது. எதிர்மனுதாரர் கிருஷ்ணகிரியில் உள்ள சொந்த வீட்டில் குடியிருந்து வரும் நிலையில் வாடகை வகையறா செலவினங்கள் ஏதும் எதிர்மனுதாரருக்கு இல்லை என்பது தெளிவாகிறது. எதிர்மனுதாரரின் வருமானத்தை பொறுத்தமட்டில் தன்னைத்தானே பராமரித்துக்கொண்டது போக வேறு செலவினங்கள் ஏதும் இல்லை என்பது மனுதாரர் தரப்பில் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.

(iii) 1–3 ம் மனுதாரர்களின் பொறுத்த மட்டில் அவர்களது உணவு, உடை மற்றும் இதர பராமரிப்பு செலவுகளுக்காக மாதம் ஒன்றுக்கு தலா ரூ.1500/– யை வழங்கி உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. அத்துடன் 2,3 மனுதாரர்கள் தற்போது உள்ள வாழ்க்கை திறன்

ஆகியவற்றை கணக்கில் கொண்டு கணக்கீட்டதில் மைனர்களான 2, 3 மனுதாரர்கள் பள்ளியில் படித்து வரும் நிலையில் அவர்களுக்கு ஏற்படும் செலவினங்களான பள்ளி கட்டணம், புத்தக செலவினங்கள், நோட்டு, பேன, பென்சில் உள்ளிட்ட செலவினங்கள் மற்றும் மருத்துவ செலவினங்களை கருத்தில் கொண்டு பார்க்கும் போது 2,3 மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் மாதம் ஒன்றுக்கு தலா ரூபாய். 2000/- மட்டும் (P1 – Rs. 2000/- : P2 – Rs 1500 + 2000/- = 3500 : P3 – Rs 1000 + 2000/- = 3500/-) ஆக மொத்தம் ரூபாய். 9000/- .

**முடிவாக,** 1ம் மனுதாரருக்கு உத்தரவாகியுள்ள ரூ. 2000/- ம், மனு தாக்கல் செய்த தேதியான 14.08.2021 தேதியில் இருந்து நாளது தேதிவரை கணக்கிட்டு 1ம் மனுதாரருக்கு செலுத்தவேண்டும் என்றும், 2, 3 மனுதாரர்களுக்கு மாதம் ரூ. 3500/- ம் ஆக மொத்தம் (2000 + 3500 x 2 = 9000/-) தொகையை ஜீவனம்சமாக மனு தேதியில் இருந்து மேஜராகும் வரை இளவர்களின் வங்கி கணக்கில் செலுத்த வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மேற்படி ஜீவனாம்ச தொகையை பிரதி மாதம் 5ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. வழக்கின் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்வது என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2024ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J NAGALAKSHMI VIJAYARANI

Digitally signed by J NAGALAKSHMI VIJAYARANI
Date: 2024.10.24 18:42:43 +0200

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், பென்னாகரம்.

<u>**அட்டவணை**</u>

**<u>1. மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> :**

1. ம.சா.1 : திருமதி. மங்கம்மாள்

**<u>2. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>** : இல்லை

**3. <u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | ம.சா.ஆ. 1 | : | 12.09.2018 ம் தேதயிட்ட திருமணப்பத்திரிக்கை – அசல் |
| 2. | ம.சா.ஆ. 2 | : | மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம், வைப்பீடு செய்யப்பட்ட – நகல் |
| 3. | ம.சா.ஆ. 3 | : | மனுதாரரின் பிறப்பிடச்சான்றிதழ் – கணினி நகல் |
| 4. | ம.சா.ஆ. 4 | : | 12.05.2020 ம் தேதியிட்ட 2 ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் – அசல் |
| 5. | ம.சா.ஆ. 5 | : | 2 ம் மனுதாரரின் ஆதார் அட்டை – நகல் |
| 6. | ம.சா.ஆ. 6 | : | 24.11.2019 ம் தேதியிட்ட கிருஷ்ணகிரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மனுதாரரால் கொடுக்கப்பட்ட புகார் மனுவின் நகல் மற்றும் புகார் ஏற்பு ரசீதின் – நகல் (கையிருப்பு நகல்) |
| 7. | ம.சா.ஆ. 7 | : | கிருஷ்ணகிரி குடும்ப நல நீதிமன்றத்தில் மணவாழ்க்கை மீட்டமைவு கோரி தாக்கல் செய்த மனுவின் – நகல் |
| 8. | ம.சா.ஆ. 8 | : | 19.02.2020 ம் தேதியிட்ட கிருஷ்ணகிரி காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மனுதாரர் கொடுத்த புகார் மனுவின் – நகல் (கையிருப்பு நகல்) |
| 9. | ம.சா.ஆ. 9 | : | 22.10.2021 ம் தேதியிட்ட 3 ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் – அசல் |
| 10. | ம.சா.ஆ. 10 | : | மனுதாரா தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகைப்படம் மற்றும் CD |
| 11. | ம.சா.ஆ. 11 | : | 05.12.2021 ம் தேதியிட்ட மகேந்திரமங்கலம் காவல் நிலையத்தில் மனுதாரரால் கொடுக்கப்பட்ட புகார் மனுவின் – நகல் (கையிருப்பு நகல்) |
| 12. | ம.சா.ஆ. 12 | : | 24.12.2021 ம் தேதியிட்ட மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவு சென்னை அவர்களுக்கு அனுப்பட்ட புகார் மனுவின் நகல் மற்றும் அஞ்சலக ரசீதின் – நகல் (கையிருப்பு நகல்) |
| 13. | ம.சா.ஆ. 13 | : | 22.01.2022 ம் தேதியிட்ட தருமபுரி காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மனுதாரரால் கொடுக்கப்பட்ட புகார் மனுவின் – நகல் (கையிருப்பு நகல்) |
| 14. | ம.சா.ஆ. 14 | : | கிருஷ்ணகிரி குடும்பநல நீதிமன்றத்தில் OP No. 180/2022 வழக்கில் 12.12.2023 ம் தேதியில |

பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் – சான்றிட்ட நகல்

| | | | |
|---|---|---|---|
| 15. | ம.சா.ஆ. 15 | : | கிருஷ்ணகிரி குடும்ப நல நீதிமன்றத்தில் எச்.எம்.ஓ.பி.நெம்பர் 51/2024 வழக்கில் மனுவின் சார்வு செய்யப்பட்ட – நகல் |
| 16. | ம.சா.ஆ. 16 | : | 05.04.2024 தேதியில் வழங்கப்பட்ட வில்லங் கசான்றிதழ் |
| 17. | ம.சா.ஆ. 17 | : | 20.08.2020 ம் தேதியிட்ட ஸ்கேன் அறிக்கை |
| 18. | ம.சா.ஆ. 18 | : | 30.09.2022 ம் தேதியில் வழங்கப்பட்ட தீபா மைக்ரோ லேப்பின் பரிசோதனை அறிக்கை |
| 19. | ம.சா.ஆ. 19 | : | மருந்து பில்கள் (8 எண்ணிக்கை) |
| 20. | ம.சா.ஆ. 20 | : | 02.12.2023 ம் தேதியிட்ட கே.ஜி.எம் மருத்துவரின் பரிந்துரை சீட்டும், மருத்துவ அறிக்கையும் |
| 21. | ம.சா.ஆ. 21 | : | 08.01.2024 ம் தேதியில் 2 வது மனுதாரருக்காக வேண்டி செலுத்தப்பட்ட கல்வி கட்டண ரசீது |
| 22. | ம.சா.ஆ. 22 | : | பட்டா எண். 95 கணினி வழி பட்டா |
| 23. | ம.சா.ஆ. 23 | : | பட்டா எண். 2024 கான கணினி வழி பட்டா |
| 24. | ம.சா.ஆ. 24 | : | பட்டா எண். 2133 கான கணினி வழி பட்டா |
| 25. | ம.சா.ஆ. 25 | : | பட்டா எண். 1912 கான கணினி வழி பட்டா |
| 26. | ம.சா.ஆ. 26 | : | பட்டா எண். 2156 கான கணினி வழி பட்டா |
| 27. | ம.சா.ஆ. 27 | : | கிருஷ்ணகிரி குடும்பநல நீதிமன்றத்தில் OP No. 180/2022 வழக்கின் மாரிமுத்து என்பவரின் சாட்சியம் – சான்றிட்ட நகல் |
| 28. | ம.சா.ஆ. 28 | : | கிருஷ்ணகிரி குடும்பநல நீதிமன்றத்தில் OP No. 180/2022 வழக்கின் முனியப்பன் என்பவரின் சாட்சியம் – சான்றிட்ட நகல் |

**4. எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

J NAGALAKSHMI VIJAYARANI

Digitally signed by J NAGALAKSHMI VIJAYARANI
Date: 2024.10.24 18:42:58 +0200

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர், பென்னாகரம்.